பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 15

1 இஸ்லாமியக் கல்வியின் முக்கியத்துவம் 21

2 மார்க்க விளக்கத்தின் பல வகைகள் 23

3 கடமையான கல்வியின் வகைகள் 24

4 கல்வியே உள்ளங்களை உயிர்ப்பிக்கும் 28

5 கல்வியைத் தேடுவதற்காகப் புறப்படுதல் 31

6 மார்க்க அறிஞர்களின் சிறப்பு 34

7 கல்வி கற்கத் தூண்டுவதும்
அதன் சிறப்பு குறித்த விளக்கமும் 38

8 கல்வி கற்றலின் நோக்கம் 46

9 கடைசி காலத்தில் கல்வி கைப்பற்றப்பட்டுவிடும் 47

10 கல்வி கைப்பற்றப்படும் முறை 49

கேள்விகளும் பதில்களும் 52

1

இஸ்லாமியக் கல்வியின் முக்கியத்துவம்



நபி ﷺ அவர்கள் கூறியதாக முஆவியா இப்னு அபீஸுஃப்யான் ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

مَنْ يُرِدِ اللهُ بِهِ خَيْرًا يُفَقِّهْهُ فِي الدِّينِ

'யாருக்கு அல்லாஹ் நன்மையை நாடிவிட்டானோ அவருக்கு மார்க்கம் குறித்த விளக்கத்தைக் கொடுக்கிறான்.' (புகாரீ 71)

இந்த நபிமொழி மிக மகத்துவம் வாய்ந்ததாகும். இதில் அல்லாஹ் தன் அடியாருக்கு நன்மைக்கு வாய்ப்பளித்துள்ளதின் அடையாளத்தை நபியவர்கள் விளக்கியுள்ளார்கள். அது இதுவே: அடியார்களுக்கு அல்லாஹ் மார்க்க விளக்கத்தைக் கொடுத்திருப்பதாகும்.

மார்க்க விளக்கம் (ஃபிக்ஹ்) என்பது மனிதன் அல்லாஹ்வின் மார்க்கத்தையும், அல்லாஹ் அவனுக்குக் கடமையாக்கியுள்ள செயல்களையும், விலக்கியுள்ள செயல்களையும் அறிந்து செயல் படுவதாகும். அதை அல்லாஹ்விற்காக மனத்தூய்மையோடு செய்வதுமாகும். இதுவே மார்க்க விளக்கம் என்பது.

மேற்கூறப்பட்ட நபிமொழியில் வந்துள்ள 'யுஃபக்கிஹ்ஹு' என்ற வார்த்தையின் மூலச்சொல்லான 'ஃபிக்ஹு' என்பதன் அகராதிப்பொருள் 'விளக்கம்' என்பதாகும். கல்வியாளர்கள் இதற்கு 'மார்க்க சட்டதிட்டங்களை விரிவான ஆதாரங்களோடு அறிவது' என்று அர்த்தம் கூறுகிறார்கள்.

மார்க்க சட்டதிட்டங்கள் என்பது மார்க்கத்தின் அடிப்படைகளை அறிவதையும் எடுத்துக்கொள்ளும். அல்லாஹ்வின் பெயர்களையும் பண்புகளையும் அறிவதும், அல்லாஹ் தன் அடியார்களுக்கு விதியாக்கியுள்ள கடமைகளையும், குர்ஆன் மற்றும் நபிமொழியில் வந்துள்ள ஆகுமான காரியங்கள், விலக்கல்கள், கடமைகள் போன்ற அல்லாஹ் நமக்கு ஷரீஅத்தாக்கியுள்ள அனைத்தை அறிவதும்

மார்க்க விளக்கமேயாகும். மார்க்க விளக்கத்தை நாம் தேடுவது என்பது அதை அறிவதும் அதன்படிச் செயலாற்றுவதுமே ஆகும்.

ஆகவே, அல்லாஹ் யாருக்கு மார்க்கத்தை அறியும் வாய்ப்பை அளித்துள்ளானோ அவருக்கு மார்க்க விளக்கத்தை வழங்கிவிடு கிறான். அதுதான் இம்மையிலும் மறுமையிலும் நற்பாக்கியத்தின் அடிப்படையாக உள்ளது. அதை வழங்கிவிடுகிறான்.

மார்க்க விளக்கம் என்பது நோக்கங்களில் மிக மகத்துவம் வாய்ந்த தும் மேன்மை பொருந்தியதுமாகும். ஏனெனில், மார்க்க விளக்கம் இருந்தால்தான் அறிவுஞானத்தோடு செயல்பட முடியும். அப்போது தான் மனிதன் அவனது கல்வியிலும் செயல்பாட்டிலும் அறிஞ னாகவும் செயல்படுபவனாகவும் அல்லாஹ்விற்காகத் தூய எண்ணத் தோடு பணிபுரிபவனாகவும் ஆகுவான். இதுவே அல்லாஹ் தன் தூதரை அனுப்பியதின் நோக்கமாகும். அல்லாஹ் தன் தூதரை நேர்வழியைக் கொடுத்தும் சத்திய மார்க்கத்தைக் கொடுத்துமே அனுப்பியுள்ளான். இதையே அல்லாஹ் தன் வேதத்தில்,

هُوَ الَّذِي أَرْسَلَ رَسُولَهُ بِالْهُدَى وَدِينِ الْحَقِّ

அவனே தன்னுடைய தூதரை நேரான வழியைக்கொண்டும், சத்தியமான மார்க்கத்தைக்கொண்டும் அனுப்பி வைத்தான் (48:28) என்கிறான்.

இந்த வசனத்தில் அல்லாஹ் கூறியுள்ள 'நேர்வழி' என்பது பலன்மிக்க கல்வியாகும். 'சத்திய மார்க்கம்' என்பது நல்ல கல்விஞானமாகும்.

3

கடமையான கல்வியின் வகைகள்

✿

முதல் வகை: சில கல்வி ஞானங்களை ஒவ்வொரு முஸ்லிமும் கண்டிப்பாக அறிந்திருக்க வேண்டும். அவ்வாறான விசயங்களை யாரும் தெரியாது எனச் சாக்குப்போக்குச் சொல்ல முடியாது. அவற்றை அறிவதின் மூலமே மார்க்கத்தின் கொள்கை விளக்க சட்டங்கள், தொழுகை, ஸகாத், நோன்பு மற்றும் ஹஜ்ஜின் சட்டங்கள் போன்றவற்றை அடியான் சீர்படுத்த முடியும். இவ்வகையான கல்விஞானத்தைத் தேவையான அளவுக்கு ஒவ்வொரு முஸ்லிமும் பரிபூரணமாக அறிவது அவசியமாகும். தமக்குத் தெரியவில்லை என யாரும் காரணம் கூற முடியாது. இவற்றை அறிந்தால்தான் மனிதனின் மார்க்கம் சீர்பெறும்.

ஒருவன் தன் இரட்சகனை எவ்வாறு அறிவான்? தொழும் முறையை எவ்வாறு அறிவான்? ஸகாத் கொடுக்கும் முறையை எவ்வாறு அறிவான்? நோன்பு நோற்கும் முறையை எவ்வாறு அறிவான்? ஹஜ்ஜு செய்யும் முறையை எவ்வாறு அறிவான்? ஆக ஆண், பெண், சுதந்திரமானவன், அடிமை யாராக இருப்பினும் மேற்கூறப்பட்ட இவ்வகையான வணக்கவழிபாடுகளின் செயல்முறைகளை தெரியவில்லையென யாரும் தங்களிடம் கூற முடியாது.

ஆகவேதான் ஷெய்குல் இஸ்லாம் முஹம்மது இப்னு அப்தில் வஹ்ஹாப்[2] ﵀ அவர்கள் கூறுகிறார்கள்: 'நான்கு விசயங்களைக்

---

2 முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப்: இமாமவர்கள் ஹிஜ்ரீ 1115 (கி.பி. 1703)இல் சஊதியிலுள்ள ரியாது நகருக்கு அருகிலுள்ள அல்உயைனா எனும் சிற்றூரில் பனூ தமீம் கோத்திரத்தில் பிறந்தார்கள். இவர்களின் தந்தையும் பாட்டனாரும் அன்றைய நஜ்து மாநிலத்தின் பிரபல அறிஞர்களும் நீதிபதிகளுமாவர். பத்து வயதில் குர்ஆனையும் இருபதிற்குள் ஆறு பெரும் நபிமொழித் தொகுப்புகளையும் மனனம் செய்தார்கள். தந்தையிடமும் பிறகு மக்கா,

கற்பதும் அவற்றைச் செயல்படுத்துவதும் நம்மீது கட்டாயக் கடமையாகும்.

1. கல்விஞானம்,
2. அதன்படி நடப்பது,
3. அதன் பக்கம் அழைப்புவிடுப்பது,
4. அதனால் ஏற்படும் சிரமங்களைச் சகித்துக்கொள்வது.

இதற்கு ஆதாரம் குர்ஆனிலுள்ள பின்வரும் அத்தியாயமாகும்:

وَالْعَصْرِ إِنَّ الْإِنْسَانَ لَفِي خُسْرٍ إِلَّا الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ وَتَوَاصَوْا بِالْحَقِّ وَتَوَاصَوْا بِالصَّبْرِ

காலத்தின்மீது சத்தியமாக! மனிதன் (தன் ஆயுளை வீணில் செலவு செய்து) நிச்சயமாக நஷ்டமடைந்துவிட்டான். ஆயினும், எவர்கள் அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டு, நற்செயல்களையும் செய்து, சத்தியத்தை ஒருவருக்கொருவர் அறிவுறுத்தி, (பாவங்களை விடுவதிலும் நன்மைகளைச் செய்வதிலும் ஏற்படுகின்ற சிரமங்களைச்) சகித்துக்கொள்ளுமாறும் ஒருவருக்கொருவர் அறிவுறுத்தி வந்தார்களோ, அவர்களைத் தவிர (இவர்கள் நஷ்டமடைய வில்லை). (குர்ஆன் 107:1-4)

இறைநம்பிக்கையும் அதன் அடிப்படையான கல்விஞானமுமே முதல் விசயமாகும். இதுவே சத்தியத்தை அறிவதும் அதை நம்புவதுமாகும். இரண்டாவது விசயம் கற்ற கல்வியின்படிச் செயல் படுவதாகும். மூன்றாவது விசயம் நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பதின் மூலம் அல்லாஹ்வின்பால் அழைப்புவிடுப்பதாகும். நான்காவது விசயம் நன்மையை ஏவி, தீமையைத் தடுத்து, அல்லாஹ்வின்பால் அழைப்புவிடுப்பதால் மனிதனுக்கு ஏற்படு கின்ற நோவினைகளைப் பொறுத்துக்கொள்வது.

மதீனா, பஸ்றா அறிஞர்களிடமும் கல்வி படித்தார்கள். 'என் மகன் முஹம்மது பருவ வயதை அடையும் முன்னரே, மார்க்கச் சட்டங்கள் பலவற்றை நான் அவனிடமிருந்து கற்றுக்கொண்டேன்' எனத் தந்தையே கூறுமளவிற்குக் கல்வி ஆழம்கொண்டிருந்தார்கள். இவர்களின் கிதாபுத் தவ்ஹீது, ஸலாஸத்துல் உசூல் போன்ற நூல்கள் மிகவும் பிரபலமானவை. ஹிஜ்ரீ 1206 (கி.பி. 1792)இல் தமது 91ஆம் வயதில் திர்யிய்யா நகரில் மரணித்தார்கள்.

4

கல்வியே உள்ளங்களை உயிர்ப்பிக்கும்

✿

நபியவர்கள் கொண்டு வந்த நேர்வழியையும் ஒளியையும் மழைக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள். பூமி காய்ந்த பின்பும் மழையின் மூலமே துளிர்க்கும். அவ்வாறுதான் கல்விஞானத்தின் மூலம் மட்டுமே உள்ளங்களும் பார்வைகளும் உயிர்பெறும். உள்ளங்கள் உயிர் பெறுவதே பூமி உயிராகுவதைவிட பெரும் கட்டாயத் தேவையாக உள்ளது. மட்டுமன்றி உடல் உயிரோடிருப்பதைவிடக் கடும் தேவையாக உள்ளது.

ஆக, மனிதனுக்குத் தனது உடல் உயிர் பெறுவதின் தேவையை விட கட்டாயத் தேவை உள்ளம் உயிர் பெறுவதாகவே இருக்கிறது. ஏனெனில், உள்ளம் உயிராக இருந்தால்தான் இம்மையிலும் மறுமையிலும் நற்பாக்கியம் அடைய முடியும். உள்ளம் மரணித்து விட்டால் இம்மையிலும் மறுமையிலும் துர்பாக்கியமே கிடைக்கும். மனிதனின் உடல் உயிரோடிருப்பதால் மட்டுமே பெரிய, முக்கிய மான விசயங்களைச் செய்துவிட முடியாது. காரணம் மனிதன் உயிர் வாழ்ந்தால் பிறகு மரணித்தே தீருவான். அல்லாஹ் தன் வேதத்தில்,

كُلُّ نَفْسٍ ذَائِقَةُ الْمَوْتِ

ஒவ்வோர் உயிரும் மரணத்தைச் சுவைத்தாக வேண்டும் (29:57) என்கிறான்.

ஆயினும் மனித நோக்கம் இம்மையிலும் மறுமையிலும் பலன் நல்கக்கூடிய ஒன்றின்பக்கமே இருக்க வேண்டும். அது உள்ளம் உயிர் பெறுவதில் மட்டுமே உள்ளது.

நபி ﷺ அவர்கள் கொண்டு வந்த பலனுள்ள கல்விக்கு பூமியில் விழக்கூடிய மழையை உவமானம் காண்பித்துள்ளார்கள். அதை மூன்று பங்காகப் பிரித்துள்ளார்கள்.

6

மார்க்க அறிஞர்களின் சிறப்பு

அல்லாஹ் தன் சங்கைமிக்க வேதத்தில் மார்க்க அறிஞர்களைப் பற்றி புகழ்ந்து பேசுகிறான். மேலும், நபி ﷺ அவர்கள் தங்களது பொன்மொழிகளிலும் கற்ற கல்வியின்படிச் செயல்படக்கூடிய மார்க்க அறிஞர்களைப் பற்றி அதிகமாகப் புகழ்ந்துள்ளார்கள். இதுவே அவர்களுக்குப் போதுமான சிறப்பாகும்.

شَهِدَ اللَّهُ أَنَّهُ لَا إِلَٰهَ إِلَّا هُوَ وَالْمَلَائِكَةُ وَأُولُو الْعِلْمِ قَائِمًا بِالْقِسْطِ لَا إِلَٰهَ إِلَّا هُوَ الْعَزِيزُ الْحَكِيمُ

(நபியே!) நீதியாளனாகிய அல்லாஹ் சாட்சி கூறுகின்றான்: 'நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குத் தகுதியான இறைவன் வேறு யாரும் இல்லவே இல்லை.' இவ்வாறே வானவர்களும் (வேதத்தை அறிந்த) கல்வியாளர்களும் சாட்சி கூறுகின்றார்கள். (அனைவரையும்) மிகைத்தவனும் ஞானமுடைய வனுமான அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரு மில்லை (3:18) என்று அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்.

இந்த வசனத்தில் அல்லாஹ்வாலும் அவனது வானவர்களாலும் சாட்சி சொல்லப்படுகிற ஏகத்துவத்திற்கு, கல்வியாளர்களின் சாட்சி யத்தையும் கூடவே இணைத்தே கூறப்பட்டுள்ளது. இது மார்க்க அறிஞர்களின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது. மேலும் அல்லாஹ் குர்ஆனில்,

هَلْ يَسْتَوِي الَّذِينَ يَعْلَمُونَ وَالَّذِينَ لَا يَعْلَمُونَ

கல்வி அறிவுடையவனும், கல்வி அறிவில்லாதவனும் சமமாவார் களா? (39:9) என்பதாகக் கூறுகிறான்.

மார்க்க அறிஞர்களுக்கும் அறிவீனர்களுக்கும் இடையே பெருத்த வித்தியாசம் இருப்பதனால் இந்த இரண்டு சாராரும் சரிசமமானவர்கள் அல்ல என்கிறான் அல்லாஹ். மேலும், அவன் கூறுகிறான்:

7

கல்வி கற்கத் தூண்டுவதும் அதன் சிறப்பு குறித்த விளக்கமும்

✿

நபி ﷺ அவர்கள் கூறியதாக அபுத்தர்தா ؓ அறிவிக்கிறார்கள்:

مَنْ سَلَكَ طَرِيقًا يَلْتَمِسُ فِيهِ عِلْمًا، سَهَّلَ اللهُ لَهُ بِهِ طَرِيقًا إِلَى الْجَنَّةِ، وَمَا اجْتَمَعَ قَوْمٌ فِي بَيْتٍ مِنْ بُيُوتِ اللهِ، يَتْلُونَ كِتَابَ اللهِ، وَيَتَدَارَسُونَهُ بَيْنَهُمْ، إِلَّا نَزَلَتْ عَلَيْهِمِ السَّكِينَةُ، وَغَشِيَتْهُمُ الرَّحْمَةُ وَحَفَّتْهُمُ الْمَلَائِكَةُ، وَذَكَرَهُمُ اللهُ فِيمَنْ عِنْدَهُ

கல்வியைத் தேடி ஒரு பாதையில் நடப்பவருக்குச் சுவனத்தின் பாதையை அல்லாஹ் இலகுவாக்குகிறான். இறையில்லங்களில் ஒன்றில் ஒரு கூட்டம் இறைவேதத்தை ஓதவும் மக்களுக்கிடையே அதைக் கற்பிக்கவும் ஒன்றுகூடினால் அவர்களின்மீது அமைதி இறங்கியே தீரும். இறையருள் அவர்களை அவசியம் மூடிக்கொள்ளும். வானவர்கள் அவர்களை அவசியம் சூழ்ந்துகொள்வார்கள். அல்லாஹ் தன்னிடம் உள்ளவர்க(ளான மலக்குக)ளிடம் அவர்களை நினைவுகூர்ந்தே தீருவான். (அறிவிப்பு: அபூ ஹுரைரா ؓ, முஸ்லிம் 2699)

இந்த நபிமொழியில் கல்வியின் சிறப்பு குறித்தும் அதை பெற்றுக் கொள்வதற்குரிய பல்வேறு காரணங்களான பாடம் கற்பதற்காக ஒன்றுகூடுதல், அமர்தல், கல்வியைத் தேடி பாதையில் நடந்து செல்லுதல் அனைத்தின் சிறப்புகளும் கூறப்பட்டுள்ளன.

கல்வியைத் தேடி நடந்து செல்லும் பாதை என்றால் அதற்காகக் காலார நடந்து செல்வதையும் குறிக்கும், பயணம் செய்து போவதையும் குறிக்கும், அதை அடைந்துகொள்ள நாம் மேற்கொள்கிற அனைத்து காரணங்களையும் குறிக்கும். ஏனெனில், கூடுதலான கல்வியை அடைந்துகொள்ள பலவிதச் சிரமங்களையும் சந்திக்க வேண்டும். மேலும், நேரத்தையும் ஒதுக்க வேண்டும். சுகங்களை